

யாழ்ப்பாணம், தென்மராட்சி, பங்களா வீதி

மீசாலை மேற்கைச் சேர்ந்த அமரர்

# திரு தம்பிராசா சுந்தரலிங்கம்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

## சுந்தரமலர்

02.01.2011

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*யாழ்ப்பாணம், தென்மராட்சி, பங்களா வீதி*

*மீசாலை மேற்கைச் சேர்ந்த அமரர்*

# *திரு* தம்பிராசா சுந்தரலிங்கம்

*அவர்களின் சிவபதப் பேறு குறித்த*

## சுந்தரமலர்

## 02.01.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை....



அன்புள்ள அப்பாவாய்

ஆதரிக்கும் துணைவனுமாய்

பண்புமிகு மாமாவாய்

பாசமிகு பேரனுமாய்

உறவுகட்கு உறுதுணையாய்

ஊர் திரிந்து உழைத்து எமை

ஆளாக்கி அரவணைத்தே

அன்பு சொரிந்த உமை

காணாமல் கலங்கி – மலர்

காணிக்கை ஆக்குகின்றோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
1950 . 03 . 22

மறைவு
2010 . 12 . 03

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த

அமரர்

# திரு தம்பிராசா சுந்தரலிங்கம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு நல்விகிர்தி அபர திரயோதசிதனில்
பூண்ட வெள்ளிதனில் போயினனே – மீண்டொருகால்
பிறவாமல் சுந்தரலிங்கந்தான் சிவகதியை
மறவாமல் மறைந்தான் விரைந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்



திருவும் கல்வியும் சீரும் தளைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
மருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவம்

### தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருக நிலாவி யமைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதியீச் சரங்காமுறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுவாய் பிறக்கினும் புண்ணியா
வுன்னடியென் மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டும்
இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கியிருந்தருள்
செய் பாதிரிப்புலியூர்ச்
செழு நீர்ப் புனற் கங்கை செஞ்சடை
மேல் வைத்த தீ வண்ணனே

### *திருவாசகம்*

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண் உளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலம் இட்டு அலறி
உலகு எலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே

### *திருவிசைப்பா*

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னையென்பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒளி வறநிறைந்த ஒண் சுடரே
முன்னை யென்பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்து எனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனிமை யாயினையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *திருப்பல்லாண்டு*

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

### *திருப்புராணம்*

சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளியென்னை வழித்தொண்டுகொண்டாய் போற்றி
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்து ளாடுஞ் சேவடி போற்றியென்ன

### *திருப்புகழ்*

ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரன் சுவட்டினில்

ஆலயமும் பூசைகளும் நாற்றிசையும் நிறையும் சாலவும் மாந்தர்களின் பக்திகீதம் பரவும் சோலை நிறை மாமரத்தில் குந்தி, மந்தி பாயும் தோலைக் கடித்து நிறை மாங்காய் பந்தாய் வீசும். தென்னை, பனை, வாழை எல்லாம் குலைகள் தூங்கும் வண்ணப்பலாக்கள் கனி தேனாய் சிந்தி ஓடும். கற்றோர்கள், கலைவளர்ப்போர், கவிஞர் எனப் பற்றோடு வாழுகின்ற பழமை நிறை மீசாலையில் பழமை கொஞ்சும் எங்கும் என்றும் எழில் தங்கும் விசுவாசம் கொண்டு தொழிலாற்றும் வடக்கினிலே இடையறாத ஊக்கமும் இணையில்லாத முயற்சியும் தடையில்லாமல் உழைத்தவன் தம்பிராசனும், பரந்தன் நெல்வயலும் பசுக்கன்று வளர்த்தலும் தரமது என்றுமே தக்கார்கள் பேசிட இலட்சுமிப்பிள்ளையுடன் துணையென இயற்றிய இல்லற வாழ்க்கையின் நல்லறம் பேணிட கண்ணென மணிகளாய் வந்தவர் எண்மர், பண்ணிய புண்ணியம் பெரிதெனப் பேசிட சிவபாக்கியம், குமாரவேலு, நல்லம்மா, கமலாதேவி, குணசிங்கம்,சுந்தரலிங்கம், சண்முகலிங்கம், ஸ்ரீஸ்வரன் என்று நாமம் சூட்டிட இனிய கல்வி ஊட்டிட நன்று வளர்ந்தார் நல்ல மக்கள் சுற்றமும் துலங்கிடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேம்பிராய் கலட்டியில் விநாயகன் சூழலில் தாமும், குடும்பமுமாய் பிரயாசையுடன் பாடுபட்டு பயிர்பல நாட்டியும் பயன்மிகக் கொண்டும் ஓயிலாகப் பிள்ளைகள் யாவரும் வளர்ந்திட ஒவ்வோர் தகுதியும் குணநடையும் சிறந்திட அவ்வவ்வேளை பெற்றிட அவர்க்கேற்றதுணைதேடி சீரும் சிறப்புமாய் வாழ்ந்து வருகையிலே ஆறாவது பிள்ளையிவன் அருமை மகனுமென நாலுபேர் மதித்திட நற்பண்பு பேசிட சுந்தரலிங்கம் இவன் சுறுசுறுப்பு மிகக் கொண்டான். சந்ததம் குலதெய்வம் வீரகத்தி விநாயகர் மேல் சிறுவயது தொட்டு சிந்தைதனை நிறைத்து விக்கினேஸ்வராவில் கல்வி கற்று முடித்தினிதே தந்தைக்கு உதவியாய் தாமும் உறுதுணையாய் தன் தொழில் எனக்கொண்டு தாமுயர்ந்து நின்றனனே.

மீசாலை வளங்களுடன் மேம்படலாம். இன்னுமென்றும் கூறாது கோட்டை கட்டிதனில் கமம் செய்து, மேலும் மீசாலை மேற்கினில் வாழ்ந்த கதிரவேலராம் மண்டுவில் அம்மனின் கருணை அருள்பெற்ற வன்புகழ் சுந்தரி இராசம்மாவை மணம் செய்தே பெற்றாராம் முத்துக்களில் மூத்தவள் லிலிதாவாம். மற்றவர்கள் மகன்மார் ஸ்ரீதரன், கிருபாகரன், குணசீலன் என்னும் குணமுடைப் புத்திரரில் மணம்முடிக்கும் வயதில் ஸ்ரீதரன் மறைந்திட சீராய் பேராய் வளர்த்த லலிதாவை சிறப்பான சுந்தரற்கு பொருத்தம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியுமே திருமணம் கண்டதில் திருவுடை மக்கள் நால்வர், சுதர்சன், சுலோஜன், சுகிர்தன், சுகந்தன் நால்வரையும் குறையின்றி நல்லபடி வளர்த்துமே பள்ளிக்கனுப்பி பாடங்கள் கற்றுவர பணபலம் வளம்பெற பரந்தனிலே அமைந்த உப்புக்கூட்டுத்தாபனத்திலே சுந்தரனும் பணிசெய்தும் திறம்பட திரவியம் தேடுவோமென அகவை நாற்பத்தொன்றில் சுவிஸ் சென்று அங்கே செய்தொழில் தெய்வமெனக்கொண்டு வாழ்வினில் உயர்ந்திட மக்களை ஒருவழிப்படுத்தியும் வளங்கள் மிகுந்தது வாட்டிய நிலைகளே.

நாட்டினில் குழப்பங்கள் நவின்றிட முடியா பாட்டினில் சொல்லி பயன்தர மாட்டா வீட்டினில் பிள்ளைகட்கு பாதுகாப்பு என்ன, காட்டுவோம் பாதையை என்று சுந்தரனும் முன்னவன் சுதர்சனை, பிரான்சுக்கு அனுப்பியும் பின் சுலோஜனை ஜேர்மனி அனுப்பியும், மூன்றாம் மகன் சுகிர்தனை பிரான்சுக்கு விட்டும் தன்னால் முடிந்த பணிகளைச் செய்தும் தாமும் ஓய்வு பெற்று வந்தவன் சுந்தரனே.

போதும் போதும் என்று பணம் இருந்தாலும் பொல்லாப்பு நாட்டில் குறையவே இல்லை. இளைவன் சுகந்தனும் வளர்ந்து விட்டானே இளைஞனாம் இவனையும் சுவிஸ்சுக்கு அனுப்பி தம்வீடு தன் மனைவி என லலிதாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரன் வாழ்ந்தாலும் சும்மா இருக்காது மோட்டார் சைக்கிளில் ஓடியும் திரிந்தும் போட்டவேலிகள் பயிர்களைப் பார்த்தும் கோயில் வேலைகள், அன்னதானம் குறைவிலாத பணி செப்பவே செய்தனன்.

மூத்தவன் சுதர்சனுக்கு பொருத்தம் பார்த்து மீசாலை வாழ் சிவானந்தமூர்த்தி துணை கமலேஸ்வரியும் நற்றவத்தால் பெற்ற தனுஷாவை அனுப்பியும், திருமணம் கண்டும் பேரன் பிறக்கவும் சாருகன் என்னவும் பேசிப்பேசி ரெலிபோனில் அடிக்கடி பெற்றவர் ஆசைமொழி ஆசிகள் கொடுத்தும் ஜேர்மனி சென்ற சுலோஜன் மகனுக்கு கல்வயலூர் நமசிவாயம் வசந்தகுமாரியின் புத்திரி சிவராஜியை திருமணம் செய்தும் பேர்த்தி சாமினி பிறக்கவும் அழைக்கவும் அகமகிழ்ந்தானே சுந்தரலிங்கமும்.

மூன்றாவது மகன் சுகிர்தன் திருமணம் நன்றாய் முடித்திடும் கனவினில் ஊரில் வாழைத்தோட்டமும் செய்து வாட்டுவோம் உடலை ஊதிடுது உடம்பென்று ஒருவேளை இருக்காது மாறி மாறி அலுவல்கள் அத்தனையும் செய்து காலில் வீக்கம் கண்டு மருந்துடன் கொழும்பு சென்று அலுவல்கள் முடியவில்லை. கொடுமையாய் வந்ததே வருத்தம் ஏதென்று அறியாமல் டெல்மனில் அவசர சிகிச்சையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுநாள் இருந்தும் இரத்தம் ஏற்றியும் ஏதொன்றும் விளங்காது என்ன நடந்தது என்று மனம் புண்பட இந்நிலைகண்டு மூத்தமகன் உடன்வந்து முழுமூச்சாய் நின்று, யாழ்ப்பாணம் வைத்தியசாலைதனில் மாற்றினாலும் பாழ்போன காலமது பயன்தரவில்லையே. இரத்தப்புற்றுநோய் வடிவில் வந்தானே காலனவன். கண்விழித்து கடமைகள் யாவும் செய்தாலும், சுகம் வரவில்லையென துணைவி லலிதாவும். பரம்பரையாம் அம்மனுக்கும் அருகிருக்கும் தெய்வங்கட்கும் சுகம் கேட்டு நோன்பிருந்தும் சோதனை செய்ததே அடிக்கடி ரெலிபோனில் சுகம் கேட்டு துடித்து பெற்றமக்கள் எல்லோரும் பெரிதே துவண்டாலும் உற்றவிதி ஒவ்வொருவருக்கும் எழுதியதே அன்றோ. ஏழுநாள் யாழிலும் எத்தனையோ செய்தாலும் யாவுமே பயனின்றி போக உளம் தவிக்க வீரகத்தி விநாயகனோ வித்திட்ட கணபதியோ பிள்ளையார் கதைக் காலம் பெருமைதானே வாவென்று அழைத்துத்தான் போயினனோ சுந்தரனும் அவனடிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிய மனைவி லலிதா

எதைச்சொல்லி நான் ஆற
என்ன பிழை செய்தேன் ஐயா
பறித்தவனும் கொண்டு செல்ல
பாவிநான் வாழ்கின்றேனே
வருத்தமதை முன்புகாட்டி
வைத்தியங்கள் செய்திருந்தால்
பைத்தியம் போல் நான் இன்று
பதறாது உளம் மகிழ்வேன்
நினைத்தபடி நீர் செய்தீர்
நான் மறுப்பு கூறவிலலை
சிரத்தையின்றி இன்றெதிலும்
சித்தம் குழம்பி தவிக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் மார்

## சுதர்சன், சுலோஜன், சுகிர்தன், சுகந்தன்

## அவர்களின் இதயக்குமுறல்

அன்புள்ள அப்பாவே
ஆண்மக்கள் நாம் நால்வர்
அடுத்தடுத்துப் பிறந்தோம்
ஆனாலும் அருகில் இல்லை
கற்பனையில் கனவில்
காவியம் போல் உன் கதையை
பெருமையாய் பேசுதற்கோ
பேசாமல் விரைந்து சென்றீர்
எல்லோர் திருமணமும்
ஏற்று நீர் செய்திடுவீர் - என்று
எண்ணியே இருக்கையிலே
ஏங்கிட நீர் விழுந்தீர்
குறையொன்றும் சொல்லவில்லை
கூப்பிட நீர் இல்லை
மறுபடி பிறப்புண்டேல்
மாறுமிந்த உடல் அன்றோ
எம் குலத்தில் எம் நிலத்தில்
ஏற்றமுற வருவீர் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள்
## தனுஷா, சிவராஜி

அன்புமிகு மாமாவே
பண்புமிகு மாமாவே
அடிக்கடி ரெலிபோனில்
அன்பான கட்டளைகள்
ஆறுதல் வார்த்தைகளும்
எடுத்தெடுத்தே சொல்வீர்
ஏதுபிழை நாம் நாம் செய்தோம்
அறுபது வயதினிலே
அவசரமாய் அழைத்தானோ
விட்டகுறை தொட்டகுறை
வேறெல்லாம் விதிசெய்ய
மற்று ஓர் உறவு முறையில்
மாற்றமுடன் வருவீர் மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் பேர்த்தி
### சாருகன், சாமினி

அப்பப்பா அப்பப்பா என்று நாம் அழைப்பதற்கு
அப்பப்பா இனி இல்லை எங்கு சென்றீர் நாம் அழைக்க
மண்டுவில் சோலை அம்மன் காவடிக்கு போனீரோ?
கணபதியாம் வீரகத்தி கல்லடிவெட்டை போனீரோ?
கூப்பிட்டு கூப்பிட்டு குழந்தைகள் நாம் அழைத்திடவே
கோபம் என்ன பதில் இல்லை கதிர்காமம் போனீரோ?

## சகோதரர்கள்
### குமாரவேலு, நல்லம்மா, கமலாதேவி, குணசிங்கம், சண்முகலிங்கம், ஸ்ரீஸ்வரன்

ஒரு கூட்டில் பிறந்தோம்
குறையின்றி வளர்ந்தோம்
கொள்கையிலே உயர்ந்தோம்
கொடுமை எங்கள் மண்ணில்
ஒவ்வொருவர் ஒவ்வோர் நாட்டில்
வாழும் காலச் சூழ்நிலையில்
எல்லோருக்கும் புத்திமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தெடுத்துச் சொல்லுவீரே
ஊர் வந்து சுகம் இருப்பாய்
என்று எண்ணி நாம் மகிழ
ஏனப்பா அவசரமாய்
ஓடிமறைந்ததென்ன

## மாமா
## கதிரவேலு

அன்றும் இன்றும் மகளுக்கு
துணையாய் நான் இருப்பேன்
என்று தான் எண்ணியோ
ஏகிவிட்டீர் மருமகனே
இத்தனை வயது வந்தும்
இல்லத்தில் காத்து நிற்க
இப்படி நீர் மோசம் செய்ய
என்ன நான் பிழை செய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு மாமாவே!

எங்கள் அன்பு மாமாவே

ஆசை மாமாவே

அருமை மாமாவே

உலகின் பலநாடுகள் சுற்றியும் எம்மிடம் வந்து எங்கள்

உள்ளத்தைக் கொள்ளை கொண்டீரே நெஞ்சம் மறக்குமோ?

சுந்தரத் தமிழில் சுவையான பலகதைகள் புகட்டினீரே

எனி என் செய்வோம்

எம் நன் நாளிற்கு உங்கள் வரவை

எதிர்பார்த்திருக்கையில்

கொடிய நோய் சூழ்ந்து கொள்ளை கொண்டது என்னவோ?

எம் மாமாவே?

பூதவுடல் அழிந்தாலும் புகழ் என்றும் நிலைத்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள்

நித்திலா, நித்திகன், கர்ணன்

(பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

நெஞ்சோடு அணைத்து நீதி சொல்லி
கையோடு அணைத்து கல்வி புகட்டி
கண்ணாக எனை வளர்த்த அப்பாவே
அறிவை நிறைத்து அன்பை ஊட்டி
அழகான வாழ்வுதனை எனக்கமைத்த
என் பாசமிகு தந்தையே
பார்மீதில் நீங்கள் சென்ற இடம் எதுவோ?
ஏங்கும் எனக்கு விடைதர வாரீரோ

வாழ்வு வளம் பெற வழிகாட்டிய தெய்வமே
என் வாஞ்சை உள்ள மாமாவே
துயர்தனில் எனைத்தள்ளி
வெகுதூரம் சென்றீரோ.....?
தாய் போல் எனைத் தாங்கிட
மீண்டும் இங்கு வருவீரோ?
ஏங்கித் தவிக்கின்றேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பப்பா என்று அழைத்து மகிழ்ந்திட
அருகில் நீங்கள் இல்லையே
பால்போல் நிலவில் அன்புக்கதை கூறி
அன்னந்தனை அன்பாய் ஊட்டிடும் பாக்கியம்
எனக்கு இனி இல்லையோ?
நிலவு மட்டும் வருகிறது
நீங்கள் வரவில்லையே
முகம் காணத்துடிக்கின்றேன்
விரைந்தோடி வாருங்களேன்

**சுதர்சன்(மகன்) தனுஷா(மருமகள்)**
**சாருகன் (பேரன்)**
**- பிரான்ஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டுவில் சோலை அம்மனிடம் ஆத்ம சாந்தி வேண்டுதல்

இல்லாத விருட்சம் இல்லை அம்மா உன் சோலை எழிலாக வேறு இல்லை. இலஞ்சியாரணியம் அதில் இலங்குகின்ற சுந்தரி நீ எத்தனை அற்புதங்கள் எண்ணிட எண்ணிட மனம் உருகுகின்றதே பங்குனியில் பொங்கல் என்றால் பால் வழியும் பானை எங்கும் பயறும் பாலும் சர்க்கரையும் பச்சரிசி தானும் சேர்த்து நிறைந்தமுது படைப்பார் அம்மா அண்டை அயல் ஊருள்ள ஆலயங்கள் ஆண்டு தோறும் காவடிகள் உன்னைச் சேரும் . அன்னதானம் குறையாமல் அள்ளி அள்ளி தருவாயே அம்பிகையே கண்ணகையே மனோன்மணியே தாயே கேட்ட வரமெல்லாம் ஈந்து நிற்கும் தெய்வமே நாட்டமுள்ள உன்னடியான் சுந்தரலிங்கம் வந்தானே கேட்ட அவன் அன்பை ஏற்று ஆத்மசாந்தி அருள்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லடி வெட்டை வீரகத்தி

## விநாயகரிடம் ஆத்மசாந்தி வேண்டுதல்

முன்பிறந்த மூத்தவா முதல்வனான முக்கணா கல்லடிவெட்டைதனில் அமர்ந்த கணபதியே கரிமுகவா, வீரகத்தி விநாயகா, வெவ்வினையை அறுப்பவா சூரனைச் சங்கரித்த வேலவனின் சோதரா உன்னடி பணிவோரின் உள்ளம் நிறைந்தவா பின்னவன் பிணி போக்கி பேறுகள் அருள்பவா தோட்டம் பயிர்கள் தொழில்கள் அளிப்பவா நாட்டமுடன் நித்தம் நின்னருள் விழைந்து ஓட்டமுடன் சிறுவயதில் உன்னடிக்கே வந்து ஆலயம் வளர ஆனபல பணிகள் சாலவும் செய்த சுந்தரலிங்கமவன் உன்னடிக்கே வர உன்னருள் சுரந்து சொன்னபடி ஆத்மசாந்திதனை தருவாயே


## தேற்றம்

வந்தவர்கள் நிற்பதில்லை
வருந்தியதும் வருவதில்லை
சிந்தனையை சீர் செய்து
செய்தவினை நல்வினையாய்
அன்றிடம் செய்தோ மென்றால்
அவை என்றும் காக்குமன்றோ
பிறப்பு என்றோ அன்றே
இறப்பு முண்டு என்று தேர்ந்தால்
மனத்தை ஒரு நிலைப்படுத்தி
மாயங்களை வெல்லலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஸ்டகம்



இராகம் : யமுனா கல்யாணி(அ)ராகமாளிகை
தாளம் : ஆதி

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவமுனி ப்ர வார்ச்சித லிங்கம்
காமதஹும் கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக மஹாமணி பூஸித லிங்கம்
பணிபதி வேஸ்டித சோபித லிங்கம்
தசஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்ப் பக்திபி ரேவச லிங்கம்
தினகா கோடி ப்ரபாகா லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

அஸ்ட தளோபரி வேஸ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஸ்ட தரித்ர விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஸ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பாம் பரமாத்மத லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றம் வாராமற்கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறுபோட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர் விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லே அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போருக்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடுசெழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
பிள்ளையற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லரையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைந்ததெல்லம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க:கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லா(ம்) ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவி மகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு சில வைத்தியங்கள்

1. அடிபட்ட கண்டல் காயத்திற்கு :-
   கரியபவளத்தை முட்டை வெண்கருவில் அரைத்துப் பற்றுப் போடவும்
2. அண்ட வாய்விற்கு :-
   1. கழற்சிப் பருப்பை பொடிசெய்து ஒரு தேக்கரண்டி வீதம் காலை மாலை பாலில் கலக்கி அருந்தவும்.
   2. உள்ளி, மிளகு, கடுகு, முருங்கப்பட்டை இவற்றை சமன் கூட்டி வெந்நீர் அரைத்து காலை மாலை வட்டுக்காய் பிரமாணம் அருந்தவும்.
3. கண் நோவிற்கு :-
   கற்கண்டை பொடி செய்து துணியில் முடிந்து புளிமாதுளம் பழச்சாற்றில் தோய்த்து கண்ணில் பிழியவும்.
4. கண் கட்டிக்கு :-
   செஞ்சந்தனத்தை முலைப்பாலில் உரைத்துப் பூசவும்
5. கள்ளி எருக்கலைப் பால் கண்ணில் பட்டால் :-
   உடன் உடைத்த தேங்காயைத் துருவி சிறிது பால் பிழிந்து விடவும்
6. கட்டிகள் அமர :-
   1. குண்டுமணி, ஊமத்தை, குப்பைமேனி இவைகளின் வெறும் துளிரும் கஞ்சியில் அரைத்துப் பூசவும்
   2. நொச்சியிலை பிழிந்த சாற்றை கட்டியின் மேல் தடவ அமரும்.
7. கருந்தேமலுக்கு :-
   மருதோன்றி இலையுடன் நவச்சாரம், வெண்காரம் கூட்டி அரைத்துப்பூசவும்
8. காதுக்குத்தலுக்கு :-
   தயிர்வேளை இலையைப் பிழிந்து நான்கு அல்லது ஐந்து துளி சாறு காதில் இடவும்
9. காதினுள் புண்ணிற்கு :-
   மிளகாய் நுனியைப் பியத்து அதனுள் சிறு வேப்பெண்ணெய் விட்டு தணலில் சூடு காட்டி விடவும்.
10. காதிரைச்சலுக்கு :-
    தயிர்வேளை இலைச்சாறும் நல்லெண்ணெயும் சமன் கூட்டி காய்ச்சிய எண்ணையை காதில் இரண்டு அல்லது மூன்று துளி விட்டு தலையிலும் பூசவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த அமரர் தம்பிராசா சுந்தரலிங்கம் அவர்கள் நோயுற்று இருந்தபோது உதவி புரிந்த வைத்தியர்களுக்கும் பிரிவுற்றபோது எமதுஇல்லம் நாடி வந்த அனைத்து உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தோளோடு தோள் நின்று உதவிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் பங்கு கொண்ட குருமார்களுக்கும் எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டு தந்துவர்களிற்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடயதாகிறது,
மற்றொருநாள்
அதுவே வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நீதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



பொதிகை கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்,
இல.03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. 0213213517

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org